Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி - 14 31 - 08 - 2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 194

ASIAN COMPUTER CENTER

... புதிய கற்கை நெறி வை 01.09.2003 தி... பிற்பகல் 4 மணி முதல் ஆர...கப்படவுள்ளது.

DIPLOMA IN MS OFFICE

பயிற்சி முடிவில் மேற்படி நிறுவனத்தின் அங்கீகார... சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
செ. சஜீவன்,
2ம் வட்டாரம்,
துர்க்கா வீதி, புதுக்குடியிருப்பு.

## வலைபந்தாட்ட அணி பெற்ற வெற்றி எமது தேசத்துக்கு கிடைத்தவெற்றியாகும்

### வரவேற்பு நிகழ்வில் காவல்துறைப்பொறுப்பாளர்



தமிழீழ வலைபந்தாட்ட அணியின் வெற்றியை, தமிழீழ தேசத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சாதாரண வெற்றியாக நாம் கருதமுடியாது என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் தமிழீழ வலைபந்து அணியினரை கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற நிகழ்வில் வாழ்த்துரை வழங்கும் போதே மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போராட்ட சூழலில் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒரு நீண்ட பயிற்சி இல்லாமல் பல்வேறு பிரதேசங்களிலும் இருக்கின்ற இந்த வீராங்கனைகளை ஒன்று சேர்த்து ஒரு குறுகிய கால பயிற்சி மூலம் இவ்வாறான பெரியவெற்றியை ஈட்டித் தரும் அளவுக்கு இந்த அணியை உருவாக்கி தொடர்ச்சியான பயிற்சி எடுக்கும் வெளிநாட்டு அணியுடன் மோதி வெற்றியீட்டியிருப்பது என்பது சாதாரண விடயமல்ல.

ஆகவே இந்த அணி தொடர்ச்சியான பயிற்சிகள் எடுப்பதன் மூலம் எமது தேசமும் மக்களும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## - சிறில. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு- சமஷ்டி குறித்து விளக்க டில்லியில் கருத்தரங்கு

பல்தேசிய இனப் பரவல் மற்றும் தேசக் கட்டுமானம் தொடர்பாக அரசு சார்பற்ற நிறுவனமான இன்பாகர் இந்தியாவின் தலைநகர் டில்லியில் நடத்துகின்ற கருத்தரங்கில் பங்கேற்க நேற்று ஆளும் அணிமற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபது பேர் டெல்லி சென்றுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்கேற்கச் சென்றுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் தெரிவிக்கும்போது,

இங்கு இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு சமஷ்டி அமைப்பு முறை என்ன என்பதை விளங்கப்படுத்துவதற்கு கூட்டப்பட்ட கருத்தரங்காகும்.

ஆகவே தற்போது இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் சமஷ்டி என்பது பிரிந்து செல்வதென்ற ஓர் நிலைப்பாட்டை கருத்தில் கொண்டுள்ளனர்.

இதில் சமஷ்டி அமைப்பு இந்தியாவில் எத்தகைய பிரிவினையையும் ஏற்படுத்தாது எப்படி அது இணைந்துகொண்டுள்ளது. சமஷ்டி என்பது பிரிவினை அல்ல. அதன்மூலம் பல மக்கள் வாழ்கின்ற ஓர் நாட்டிலே ஒரு நிலையான சூழ்நிலையை ஏற்படுத்தி பல மக்களும்ஐந்துசமமாக வாழக்கூடிய

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நேற்று சுவிற்சர்லாந்து விஜயம்

இடைக்கால நிர்வாக சபை குறித்து பிரான்சில் ஆராய்ந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை சுவிற்சர்லாந்துக்குவிஜயம்செய்துள்ளனர்.

நேற்று சுவிஸ் சென்றுள்ள இக் குழுவினர் நாட்டின் ஆசியப் பிராந்தியத்துக்கான அதிகாரி, அரசியல் துறை நிபுணர்களை சந்தித்துப் பேசவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இன்று மாலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## புராதன காலத்தில் சிங்களவர் குடியிருந்த வட,கிழக்கை தமிழர் ஆக்கிரமித்தனர்

### தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மத்தியில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

**வடக்கு கிழக்குப் பகுதிகளில் புராதன காலத்தில் இருந்து சிங்கள மக்கள் குடியிருந்தார்கள். தற்போது அப்பகுதிகளை தமிழர்கள் ஆக்கிரமித்துள்ளனர் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார் பௌத்தர்களின் சின்னங்களைப் பாதுகாத்தல் என்னும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ள தாது கோபுரங்களின் சிதைவுகள் நீர்ப்பாசன அணைகள் யாவும் 2500 வருடங்களுக்கு முன்னதான எமது மூதாதைகளின் சொத்துக்களாகும். அவற்றை அழித்துவிட இடமளிக்கக்கூடாது. வரலாறு இல்லாத நாடு உயிரில்லாத உடல். அப்பகுதிகளில் புராதன காலத்தில் இருந்து சிங்கள மக்கள் குடியிருந்தனர். தற்போது தமிழர்கள் ஆக்கிரமித்திருக்கின்றனர் என்றார். இதே வேளை இந்தநிகழ்வின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கும் புராதன பௌத்த சின்னங்களைப் பாதுகாக்க நடவடிக்கை

(8ஆம் பக்கம் பார்க்க)

## - நீதவானின் உத்தரவை மீறி - பண்ணை, அல்லைப்பிட்டி சாவடிகளில் இராணுவத்தினரும் சோதனை

பண்ணை மற்றும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடிகளில் பொலிசாருடன் இணைந்து இராணுவத்தினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

மேற்படி சோதனைச் சாவடிகளில் சிவில் நிர்வாக கட்டமைப்பைப் பேணும் முகமாக பொலிசார் மட்டுமே பொதுமக்களை சோதனையிட வேண்டுமென ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் கடந்த சில நாட்களாக பொதுமக்களின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## -பாரஊர்தி மோதியதில்- இருசக்கர உழவு இயந்திரம் குடைசாய்ந்து பலத்தசேதம்

(அலுவலக செய்தியாளர்)

வேகமாக வந்த பாரஊர்தி இருசக்கர உழவு இயந்திரத்துடன் மோதியதில் உழவு இயந்திரம் நடுவீதியில் குடைசாய்ந்து சேதத்திற்குள்ளாகியது.



மேற்படி சம்பவம் நேற்றுப்பிற்பகல் 5.30 மணியளவில் ஏ-9 பிரதான வீதியில் கினி. கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் நடைபெற்றது.

புதிதாக இருசக்கர உழவு இயந்திரத்தினை கொள்வனவு செய்து யாழ் சாவகச்சேரிப் பகுதிக்கு எடுத்துச் செல்கையில் பின்னால் வேகமாகவந்த மண்ஏற்றும் பார ஊர்தி (டிப்பர்) மோதியதில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் குடாநாட்டில் குறைவடைந்திருந்த சமூகச்சீரழிவுகளை வளர்க்க சிறில-படையினர் தீவிரமுயற்சி

குடாநாட்டில் குறைவடைந்திருந்த சமூகச் சீரழிவுகள் மீண்டும் தலைதூக்குவதற்கு படையினர் ஊன்றுகோலாக உள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குடா நாட்டில் பரவலாக மீண்டும் தடை செய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடாக்கள் மற்றும் மஞ்சள் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்களைப் படையினர் இளைஞர்களுக்கு வழங்கிவருவதாகக் கூறப்படுகிறது. அண்மையில் சங்கானைப்பகுதியில் 17 வயதுக்கும் குறைந்த சிறுவர்கள் இருவருக்குக் கடற்படையினர் இவ்வாறான பிரசுரங்களை விநியோகித்ததாகவும் இது தொடர்பாக கலாச்சாரத்தை பேணும் இளைஞர்கள் குழுவிற்கு கூறப்பட்ட வேளை அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சட்ட ஆலோசகர் அமெரிக்காவில் கைது செய்யப்படலாம் என்ற செய்திக்கு மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் அமெரிக்கா திரும்பும் போது கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக கொழும்பில் வெளியான செய்தியை அமெரிக்கா மறுத்துள்ளது. செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில நடாத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அமெரிக்காவின் தேசபற்று சட்டத்தின் கீழ் கடுமையான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி அமெரிக்க அரசால் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட இயக்கங்களுக்கு உதவி செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அதிகபட்சமாக மரண தண்டனையும் வழங்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே கொழும்பில் உள்ள சில ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமார் அமெரிக்கா செல்லும் போது கைது செய்யப்படலாம் என்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக கருத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவு.வில் மகளிர் அமைப்புக்கள் சங்கமிக்கும் மாபெரும் கூட்டம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள மகளிர் அமைப்புக்கள் சங்கமிக்கும் மாபெரும் கூட்டம் ஒன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும் இச்சங்கம நிகழ்வு எதிர்வரும் 4ஆம், 6ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் உரிமைகள் தொடர்பாகவும் அபிவி...த்தி தொடர்பாகவும் ஆராயப்பட உள்ள இந்நிகழ்வில் மகளிர் அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரம் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். (10)

## வரிவிளம்பரம்

**அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி**

புவியியல் Day Class ஆரம்பம்- 31-08-2003 (ஞாயிறு) காலை 9.00 மணி ஆசிரியர் K ஞானம். நிர்வாகி. (3685)


## திருமுறிகண்டியில் ஆவணிச் சதுர்த்தி

(திருமுறிகண்டி)

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய ஆவணிச்சதுர்த்தி திருவிழா இன்று நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று விசேட பூசைகள் நடைபெறவுள்ளதுடன் அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளது. (09)

**-கிளி. தொழில் நுட்பக் கல்லூரியில்-**

# கணினிப் பயிற்சிக்கு நேர்முகத்தேர்வு நாளை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெறவுள்ள கணினிப்பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களுடன் நாளை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்லூரிக்கு சமுகமளிக்கும் வண்ணம் கல்லூரி முதல்வர் தி. பிரபாகரன் வேண்டியுள்ளார். (சோ)

# உலக உணவுத்திட்டத்தின் கீழ் மாணவருக்கு உணவு வழங்கல்

கிளி. அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் உலக உணவுத்திட்ட நிறுவனத்தின் உதவியுடனான மாணவர்களுக்கு உணவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பூநகரிமகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

மங்கல விளக்கை பாடசாலை அதிபர் எஸ்.கியூ.பி.மொறாய்ஸ் பிரதேசச் செயலர் வைரமுத்து ஆகியோர் ஏற்றினர். தேசியக் கொடியை பூநகரி அரசியல்துறை உதவிப பொறுப்பாளர் ச.றூபன் ஏற்றினார்.

உலக உணவுத்திட்ட சமையல் கட்டடத்தின் பெயர்ப்பலகையை உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.சண்முகராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு உணவு வழங்கும் வைபவத்தை பிரதேசச் செயலர் ஆரம்பித்து வைத்தார்.

சிறப்புரைகளை ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு பிரதேசச் செயலர்,வைரமுத்து. பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆற்றினர் அதிபரின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. (34)

# 3நாட்கள் விளையாட்டுப் பயிற்சி முகாம் முள்ளியவளையில் ஆரம்பம்

முள்ளியவளையில் நேற்று முன்தினம் மூன்று நாட்கள் விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

வடகிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல் விளையாட்டுத் துறை இளைஞர் அபிவிருத்தி பிரிவின் அனுசரணையுடன் முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டக் காரியாலயத்தினால் கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரிவில் இயங்கிவரும் இளைஞர் கழகங்கள் விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள், ஆகியவற்றில் தெரிவுசெய்யப்பட்ட40இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளும் விளையாட்டுப் பயிற்சி முகாமே முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றுவருகின்றது. இதற்கு முல்லைத்தீவு பதில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ். சண்முகவடிவேல் தலைமை வகிக்கின்றார்.

இப்பயிற்சி நெறியினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கல விளக்கினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

இவ்ஆரம்ப நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ். தயானந்தா, வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் ஆர்.கணேஸ், முல்லைவலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.மைக்கல் திலகராசா, முள்ளியவளை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர்,முள்ளியவளை கிராம அலுவலர், பயிற்சி விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர். இப்பயிற்சி முகாமில் உதைபந்து, வலைபந்து, மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சி விரிவுரையாளர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும், விளையாட்டு உத்தியோகத்தர்களும் உடற்கல்வி ஆசிரியர் ஆகியோர் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளனர் இன்று மாலை பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (26)

# கிளி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விழா நாளை கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாள் நடைபெறவுள்ளது.

நாளை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகி 8.ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 9.ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதிதீர்த்தமும் 11ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (சோ)


## கண்ணீர் அஞ்சலி

**திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை**

எமது பாடசாலையின் அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்களின் தந்தையார் திரு. நடராசா அவர்கள் 27.08.2003 அன்று கண்டியில் காலமானார். அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திப்பதோடு குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்,
மு/ யோகபுரம் மகாவித்தியாலயம்.

(3491)


**- சிறப்புற நடந்தேறிய -**

# கிளி. ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்க விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள்

அலுவலக செய்தியாளர்

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சங்க அங்கத்தவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு நேற்று கிளி/ மத்தியகல்லூரி மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு கிளி.டிப்போச்சந்திக் கருகாமையிலுள்ள கிளிமாவட்ட ஊனமுற்றோர் சங்க வாயிலிலிருந்து பிரதம விருந்தினர் சிறப்புவிருந்தினர்கள் மங்கல வாத்திய இசையுடன் கிளி மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கலவிளக்கினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் சிறப்பு விருந்தினர்கள் கரைச்சி பிரதேசசெயலர், பொன் நித்தியானந்தன், போருட் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் கா.சாந்தலிங்கம் கியூடெக் நிறுவன கிளி/ முல்லை மாவட்ட இணைப்பாளர் இ.கணேசபிள்ளை ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை வே.சாந்திமதி ஏற்றிவைத்தார். நிறுவனக் கொடியினை சிவமாறன் ஏற்றிவைத்தார்.

கிளி/முல்லை மாவட்ட குரு முதல்வர் தேவசகாயம் அடிகளின் ஆசியுரையினைத் தொடர்ந்து ஊனமுற்ற அங்கத்தவர்களின் விளையாட்டு நிகழச்சிகள் ஆரம்பமாகியது.

நிகழ்வில் கண்டாவளை பிரதேசச் செயலர் மத்தியாஸ், உளவளத் துறை கிளி.முல்லை மாவட்ட இயக்குநர் றெஜினோல்ட் அடிகள், கோப்பாய்ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையா, யாழ் ஊனமுற்றோர் சங்க நிர்வாக அலுவலர்மா.திலகநாதன் கருணா நிலைய இயக்குநர் ரோய்ஸ் அடிகள், ஊனமுற்றோர் சங்க இயக்குநர் அருட்சகோதரி லூட்ஸ் மற்றும் அதிகாரிகளும் கலந்து வெற்றியீட்டியோருக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். நிறுவன திட்ட இணைப்பாளர் இ.அன்ரன் நன்றியுரை வழங்கினார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் ஊனமுற்ற வர்களுக்கான மரதன் மற்றும் துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள் நடைபெற்றது.

காலை 6.00 மணியளவில் முரசுமோட்டை 2ம் கட்டை பாடசாலை முன்பாக ஆரம்பமான இப்போட்டி கிளிநொச்சிடிப்போச்சந்தியில் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க தலைமையகத்தின் முன்பாக நிறைவு பெற்றது. இப்போட்டிகளில் 09 பெண் போட்டியாளர்கள் உட்பட 37 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் 17 போட்டியாளர்கள் மரதன் ஓட்டப் போட்டியிலும்20 போட்டியாளர்கள் சைக்கிள் ஓட்டப் போட்டியிலும் கலந்து கொண்டனர். (சோ.லோ)









**- சாய்ந்தமருதுப் பகுதியில் -**

# காணாமல் போன இளைஞர்களுக்கு பாதாளக்குழுவுடன் தொடர்பு

(மட்டக்களப்பு)

காணாமல் போன சாய்ந்தமருது இளைஞர்கள் தொடர்பான விசாரணையில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுபவர்களில் ஒருவரான இப்ராகிம் இலியாஸ் பஸ்னி ரெண்டு வருடகாலமாக பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளை கொண்டிருந்தவர் எனவும், 2001ஆம் ஆண்டு சாய்ந்த மருதுப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை சுட்டுக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

முஸ்லிம் தீவிரவாதக்குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவரை தாக்கியது மற்றும் கொலை செய்ய முயற்சித்தமை தொடர்பாக இவர் மீது ஏற்கனவே இருந்த பகைமையின் காரணமாக இவரையும் இவருடைய சகாவான தம்பி லெப்பை மாருக்கையும் அவர்கள் கடத்திச்சென்றிருக்க வாய்ப்பு இருப்பதாக சந்தேகம் எழுந்திருக்கிறது.

இதேவேளை ஏறாவூர் சவுக்கடி கடற்கரையில் கரையொதுங்கிய இளைஞரின் சடலம் இவர்களில் ஒருவருடையது என வெளியான செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சிறில.பொலிசாரின் காவலில் இருந்த 60 வயது முதியவர் மரணம்

பொலிசாரின் காவலில் இருந்த 60 வயது சந்தேக நபரொவர் இறந்துள்ளார் (மேற்படி சந்தேக நபருக்கும் வேறொரு குழுவுக்கும் இடையில் மோதல் ஒன்று நடைபெற்றதாகவும் அதன் காரணமாக மேற்படிநபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டிருந்ததாகவும் அடுத்தநாள் அதிகாலை இவர் இறந்து கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது இவரது மரணம் குறித்து மகனான ஜயசிங்க என்பவர் தெரிவிக்கையில், பொலிசாரின் தாக்குதல் காரணமாகவே தமது தந்தை இறந்ததாகக் கூறினார் ஆயினும் பொலிசார் இதனை மறுத்துள்ளனர்.

# மாங்குளம் மாதர் அ.சங்க முதலாவது ஆண்டு நிறைவு விழா

மாங்குளம் மாதர் அபிவிருத்தி சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நேற்று மிகவும் சிறப்பான முறையில் ஒலுமடு தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வானது கிராம அபிவிருத்திஉத்தியோகத்தர் தலைமையில் காலை 11.30 மணிக்கு ஆரம்பமானது. இந் நிகழ்வில் பொதுச் சுடரை நியாப்திட்ட கணக்காய்வாளர் சசிக்குமார் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு பொறுப்பாளர் அன்பரசி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகளை முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு பொறுப்பாளர், மாங்குளம் ம.வி. அதிபர், நியாப்திட்ட இணைப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, கயிறு இழுத்தல் ஆகிய விளையாட்டுக்கள் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்ற பெண்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## கண்டெடுப்பு

முறிகண்டிப் பகுதியில் நேற்று முன் தினம் ஆண்களுக்கான கைக்கடிகாரமொன்றும் பாதகலைச் சொந்தஇடமாகக்கொண்ட சிதம்பரப்பிள்ளை விநாயகமூர்த்தி என்பவரது அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு முறிகண்டி வர்த்தகர் சங்கத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# ஈராக்கை ஐ. நா.விடம் கையளிக்க அமெரிக்கா உயர்மட்ட ஆலோசனை

## - இராணுவ விடயங்களில் விட்டுக்கொடுப்பு இல்லை

(வாஷிங்டன்)

**ஈராக்கை மீளக் கட்டியெழுப்பும் விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையின் கீழ் செயற்படுவது குறித்து அமெரிக்கா தீவிரமாக ஆலோசித்து வருகிறது. அமெரிக்க பிரதிப் பாதுகாப்புச்செயலாளர் றிச்சட் ஆர்மிரேஜ் இதனைத்தெரிவித்துள்ளார்.**

ஈராக்கில் சர்வதேச நாடுகளின் படை செயற்பட வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இந்நிலையில் ஐ.நா.வின் கூடுதல் பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் விதங்கள் குறித்தும் அது தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

ஈராக்கை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா பல பில்லியன் டொலர்களை செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது. எனினும் இதனை ஏற்கனவே திட்டமிட அமெரிக்கா தவறிவிட்டது. சர்வதேச சமூகமும் ஒத்துழைப்பு வழங்காவிடத்து அமெரிக்காவினால் இதனைத் தாங்கிக் கொள்வது இயலாத காரியமாகலாம் என ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிரேமர் மறைமுகமாக தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் சிவில் நிர்வாகத்தை கட்டியெழுப்பும் பணிகளை ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்க அமெரிக்கா விரும்புகிறது. அதேநேரம் இராணுவ நடவடிக்கைகளை தனது தலைமையில் தொடர்ந்தும் வைத்துக் கொள்ள அது ஆலோசிக்கிறது. இருப்பினும் சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் அமெரிக்காவுடன் முரண்பட்டு நிற்கின்றன. அதாவது அமெரிக்காவின் தலைமையில் செயற்பட பல நாடுகள் விரும்பவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆட்குறைப்பிற்கு ஆலோசனை

ஈராக்கிலுள்ள ஐ.நா. பணியாளர்களின் எண்ணிக்கையை குறைக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சியாக இடம்பெறும் தாக்குதல்களைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலைமைகளே இந்த ஆட்குறைப்பிற்கான காரணமென அதிகாரிகளை மேற்கோள் காட்டும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



60 ஆயிரம் வருடங்களின் பின் புவிக்கு அண்மையாகத் தோன்றிய செவ்வாய்க்கிரகத்தின் தோற்றம். நேவாடா பகுதியில் காணப்பட்டது.

# நஜாப் நகரில் பாரிய குண்டுத் தாக்குதல் 82 பேருக்கு மேல் பலி; பெருமளவானோர் காயம்!

ஈராக்கில் நஜாப் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பொன்றில் 82க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 229 பேர் காயமடைந்துள்ளனர். இதன்போது ஈராக்கின் சியா இன தலைவரான அயத்துல்லா முகமட் பக்கீர் அல்-ஹக்கீம் கொல்லப்பட்டுள்ளார்.

சியா முஸ்லிம் பிரிவினரின் புனிதமான புனிதத் தலங்களில் ஒன்றான அலி சமாதியில் தொழுகை முடித்து மக்கள் வெளியே வந்து கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அயத்துல்லா அல்-ஹக்கீம் அவர்கள் அந்த தொழுகையில் கலந்து கொண்டு உரையாற்றி விட்டு அப்போதுதான் வெளியில் வந்திருந்தார்.

தாக்குதல் நடந்து மூன்று மணி நேரம் கழித்து அந்தப் பகுதியில் அம்புலன்ஸ் வண்டிகள் பாதிக்கப்பட்டவர்களை ஏற்றி இறக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



ஈராக்கில் சியா மற்றும் சுனி முஸ்லிம் இன பிரிவுகளுக்கிடையே பகைமை நிலை இருந்து வருகின்றபோதிலும், மேற்படி தாக்குதல் குறித்து பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. உள்நாட்டில் வன்முறைகளைத் தூண்டி விட்டு தமது இருப்பை உறுதி செய்து கொள்ளவே இந்தத் தாக்குதலை அமெரிக்க படைகள் செய்திருக்கலாம் என்றும் ஈராக்கியர்கள் கருத்து தெரிவிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# உத்தரப் பிரதேசத்தில் பொடோ வழக்குகளை மீளப்பெற முடிவு

உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சராக பதவியேற்றுள்ள முலாயம் சிங்யாதேவ் தனது மாநிலத்தில் பொடோ வழக்குகளை மீளப்பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் ஆதரவுடன் முதல்வராக பதவியேற்றுள்ள அவர் இதன் பின்னதாகக் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

எனினும் முதல்வரின் கருத்திற்கு பாரதிய ஜனதா கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. பொடோ வழக்குகளை மீளப்பெறுவது என்பதை பொடோ நீதிமன்றங்களே முடிவு செய்ய வேண்டிய விடயமாகும் என்றும் கட்சி பிரமுகர் ஜெயபாலரெட்டி கருத்து வெளியிட்டுள்ளார்.

# பிரிட்டிஷ் பிரதமரின் ஊடக அதிகாரி பதவி துறப்பு!

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் ஊடகத் தகவல் தொடர்பு அதிகாரி அலிஸ்டன் கவிம்பில் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆயுத நிபுணர் டேவிற் கெலியின் மரணம் தொடர்பாக விசாரணை செய்து வரும் சட்ட விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அஜராகியுள்ளார். இதனைத் தொடர்ந்தே தாம் பதவியைத் துறக்கமுடிவு செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பலஸ்தீன இலட்சியம் நிறைவேற இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

## - பிரதமர் வாஜ்பாய் உறுதி கூறுகிறார்

பலஸ்தீன இலட்சியம் நிறைவேற இந்தியாவின் ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் என்று பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் பலஸ்தீன வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் டாக்டர் நபீல்சாத் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமரைச் சந்தித்தபோது பிரதமர், பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்திற்கு தனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார் என இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

மேற்காசிய அமைதி முயற்சிகள் குறித்து பிரதமரிடம் டாக்டர் நபீல் சாத் எடுத்துரைத்தார் வெளியுறவு இணையமைச்சர் வினோத் கன்னா தலைமையிலான இந்தியக் குழுவுடன் டாக்டர் சாத் தலைமையிலான குழுவும் விரிவாக விவாதம் நடத்தியுள்ளது.

அத்துடன் பலஸ்தீனத்திற்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான மருந்துகளும் பதினொரு டாட்டா வாகனங்களும் வழங்கப்படும் எனவும் டாக்டர் நபீல் சாத்திடம் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.



சுயதொழில் முயற்சிகளுக்காக ஜம்மு காஷ்மீர் மாநில முதல்வர் முன்னிலையில் காசோலையை வழங்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்.



சீனா சங்கரய் நகரில் 'பிஸ்ச' என்ற பெயரிலான 20 மீற்றர் நீளமான இந்த உணவுப் பண்டம் உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

# விண்வெளிப் பயணங்களைத் தொடர பிரேசில் உறுதி; சேதமுற்ற ஆய்வகங்களைப் புனரமைக்க ஏற்பாடு!

பிரேசில் விண்வெளி ஓடம் ஒன்று கடந்த வாரம் விபத்துக்குள்ளாகி 23 பேர் உயிரிழந்தபோதும் புதிய விண்வெளிப் பயண நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறும் என அந்நாடு அறிவித்துள்ளது.

சேதமடைந்த ஆய்வு கூடங்கள் திருத்தப்பட்டு வருவதாகவும் இதற்கு மூன்று கோடி 30 இலட்சம் ரூபா செலவிடப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரேசில் நாட்டுப் பிரதிநிதி சபை நேற்று நடத்திய கூட்டத்தில் இந்த விபத்தில் இறந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு தலா 33 ஆயிரம் டொலர் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களின் பிள்ளைகளது கல்விச் செலவையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஏற்கனவே 1997ஆம், 1999ஆம் ஆண்டுகளில் இரண்டு விண்வெளி ஓடங்களை பிரேசில் விண்வெளிக்கு அனுப்பியபோதிலும் அவை இரண்டும் விபத்துக்குள்ளாகியிருந்தன. சென்ற வாரம் ஏற்பட்ட விபத்து மூன்றாவதாகும்.




# தமிழீழத்துக்குப் பெருமை சேர்த்த;
# தமிழீழ வலைபந்து அணிக்கு அமோக வரவேற்பு

இங்கிலாந்து மண்ணில் தொடர்ச்சியாக 18 போட்டிகளில் பங்குபற்றி அனைத்திலும் வெற்றி பெற்று தாயகம் திரும்பிய தமிழீழ வலைபந்தாட்ட அணியினர் புளியங்குளம் சோதனை நிலையத்தில் வி.ஐ.பி. களுக்குரிய தகுதியுடன் வரவேற்கப்பட்டனர். தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா, காவல்துறை மோட்டார்




சைக்கிள் அணியினர் சகிதமாக இவர்களை கிளிநொச்சிக்கு அழைத்துவந்தார்.

கிளி. பொதுவிளையாட்டு மைதானத்தை காலை 9.45 மணிக்கு வந்தடைந்த இவ்வணியினர் அங்கிருந்து தமிழீழ மாணவர் அமைப்பினரின் பாண்ட்வாத்திய இசை முழங்க ஊர்வலமாக பாராட்டுவிழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட கிளி. மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பாப்பா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத்தளபதி கேணல் பானு ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து விழா மண்டபத்துக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பாப்பா மேற்படி அணியினரின் சாதனைபற்றி விரிவாக எடுத்துக்கூறினார். அதனைத் தொடர்ந்து தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா. தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தமிழ்விழி, கிளி.வலய கல்வித் திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் சிவசாமி, தமிழீழ அரசியல்துறைப் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் அணியினரை வாழ்த்தினர் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணி மைந்தன் நன்றியுரையாற்றினார்.

தமிழீழ மாணவர் அமைப்பினர் சார்பில் மேற்படி அணியினருக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்களை கேணல் ஜெயம் வழங்கினார். இதனைத் தொடர்ந்து பிரிட்டன் புறோமில் நகரில் நடைபெற்ற 8வது தமிழர் விளையாட்டு விழாவில் தமிழீழ அணியினரால் சுவீகரிக்கப்பட்ட வெற்றிக் கிண்ணத்தை அணித்தலைவி நிஷாந்தி ராஜரட்ணம் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனிடம் கையளித்தார்.

யூலை 20ஆம் திகதி லண்டனுக்குப் பயணமான மேற்படி அணி இங்கிலாந்து பிராந்திய அணிகளை வெற்றிகொண்ட தாம் கலந்துகொண்ட அனைத்துப் போட்டிகளிலும வெற்றிபெற்று தாயகம் திரும்பியுள்ளது..



தமிழீழ அணியின் இங்கிலாந்து சுற்றுலா குறித்து தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தெரிவிக்கும்போது;

எந்தவித பயிற்சிகளும் இல்லாது ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டுத்துறையில் இங்கிலாந்துக்குச் சென்று அந்தப் போட்டிகளில் முகம் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமா? என்ற ஓர் நிலை இருந்த போதும் விளையாட்டுத்துறையின் சரியான திட்டமிடலும் கண்டிப்பாக தமிழீழ அணி ஒன்றைக் கொண்டு போய் இங்கிலாந்துப் போட்டிகளில் வெற்றிபெறவேண்டும் என்ற எமது



இலக்குக்கு ஏற்ற வகையில் பெரும் கஷ்டங்களுக்கும், இடையூறுகளுக்கும் மத்தியில் அணியைத் தயார் செய்து இங்கிலாந்தில் நடைபெற்ற 8வது தேசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு கிண்ணத்தையும் சுவீகரித்தோம்.

அத்துடன் இங்கிலாந்தின் இரண்டு கறுப்பின அணிகளையும் ஒருவெள்ளையின அணியையும் தோற்கடித்ததன் பின்னர் உண்மையில் நாங்கள் தேசிய ரீதியிலான அணியை உருவாக்க முடியும் என்பதை இங்கிலாந்துக்குச் சென்ற அணியினூடாக உணரக்கூடியதாக இருந்தது.

அதேபோன்று சகல விளையாட்டுக்களிலும் எமது வளங்களை தாயகரீதியில் ஒட்டுமொத்தமாக இணைத்துக்கொண்டால் கண்டிப்பாக நாங்கள் சர்வதேச மட்டத்தில் விளையாட்டுத் துறையை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்ற சவாலை எதிர்நோக்கி இலகுவாக வெல்லக்கூடிய வாய்ப்பை எதிர்காலம் எங்களுக்குத் தரும் என்பதை நாங்கள் நம்புகின்றோம் எனத் தெரிவித்த அவர்,

வெளிநாட்டு அணிகளைப் பொறுத்தவரை அவர்கள் நுட்பங்களைக் கொண்டு விளையாடுபவர்கள். எங்களைப் பொறுத்தவரையில் பலம் இருக்கிறது. தொடர்ச்சியாக விளையாடக்கூடிய பலம் இருக்கிறது. அந்தத் திறன் மேலைத்தேய கறுப்பின வெள்ளின இனங்களுக்கு குறைவாகவே இருக்கின்றது.

ஆகவே, நாங்கள் திறன்களையும் நுட்பங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வளங்களையும் வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளுவோமாக இருந்தால் கண்டிப்பாக எல்லா அணிகளையும் வெல்லக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

அணியின் முகாமையாளர் றொகான் ராஜசிங்கம் தெரிவிக்கும் போது,

சிறிலங்கா மத்திய அரசுஏனைய மாகாணங்களுக்கு விளை யாட்டுத் துறையில் கொடுக்கும் சந்தர்ப்பங்களை வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு வழங்குவது குறைவு.

அந்த அடிப்படையில் எங்களது சுயமுயற்சியினால் நாங்கள் வெற்றிகளை ஈட்டவேண்டும்.

அத்துடன் எதிர்காலத்தில் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச தரத்திலான போட்டிகளில் எமது வீரர்கள் பங்குபற்றவேண்டும் என்பதே எமது குறிக்கோளாக உள்ளது.

விளையாட்டுத் துறையில் வேலை பார்க்கிறவன் என்ற அடிப்படையில் சிறிலங்காவின் புறக்கணிப்புக்களை நேரடியாக சந்தித்த ஒருவன் என்ற ரீதியில் எனது ஆசை சிறிலங்காவை தேசிய ரீதியில் முதலில் வெற்றியீட்ட வேண்டும். அதனூடாக நாங்கள் சர்வதேச மட்டத்துக்கு போகவேண்டும். தேசிய மட்டத்தில் நாங்கள் வெற்றியீட்ட வேண்டுமானால் திட்டமிட்ட பயிற்சியினூடாக வீரர்களுக்கு செதி ஒழுங்குகள் செய்து கொடுப்பதன் மூலம் அவ் இலக்கை அடையலாம் என்றார்.

அணியின் பயிற்றுனரான ரதிகலாதேவி தெரிவிக்கும்போது,

நான் பயிற்சி வழங்கிய அணிகளில் இவ்அணி மிகத் திறமையானது நுட்பங்களை எளிதில் புரிந்துகொள்பவர்களாக இருந்தனர். இவர்கள் நிச்சயமாக வெற்றிபெறுவார்கள் என்பதை நான் போட்டி தொடங்கி சில நிமிடங்களிலேயே அறிந்துகொண்டேன்.



இது எனக்குக் கிடைத்த மிகவும் அரிய சந்தர்ப்பம். எமது தமிழீழ அணிக்கு பயிற்சி வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகவும் சந்தோசம் அடைகின்றேன் என்றார்.







# கடற்படை அதிவேக படகுகள் கொள்வனவில் ஊழல்; விசாரணைக்கு ஆணைக்குழுவை அமைக்குக!

## - பொ.ஐ. முன்னணி அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

**அண்மையில் சிறிலங்காக் கடற்படைக்கு கொள்வனவு செய்யப்பட்ட அதிவேக யுத்தப் படகுகளுக்கான கொள்வனவில் பெருமளவு ஊழல் இடம்பெற்றுள்ளதாகப் பொதுசன ஐக்கிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது. இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.**

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பொ.ஐ. முன்னணிப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தில் இடம்பெறும் மோசடிகள் பாதுகாப்புத் துறையிலும் பரவியுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார்.

இந்த ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட பாதுகாப்பு அமைச்சரும் கடற்படைத் தளபதியும் இஸ்ரேலுக்கு சென்றிருந்ததாகக் கூறிய சரத் அமுனுகம, ஆரம்பத்தில் இவ்விடயத்தில் அமெரிக்கா அக்கறை காண்பித்தபோதிலும் பின்னர் ஆயுத விற்பனை விவகாரத்தில் இருந்து அது விலகிவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் விருப்பப்படியே அரசாங்கம் அனைத்தையும் செய்வதாகவும் இது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார். குரங்கு பாஞ்சான் முகாம் தொடர்பாக அவர் கூறுகையில், சர்வதேசமும் வலியுறுத்தியும் அங்கிருந்து வெளியேற புலிகள் மறுப்பது புலிகள் யுத்தத்துக்கு ஆயத்தமாகவுள்ளதையே காட்டுகிறது என்றார். (32)

## தேர்த்திருவிழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு-சுதந்திரபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. நாளை 1ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 2ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. தீர்த்தத் திருவிழா நாள் இரவு கலை நிகழ்வும் ஆலய முன்றலில் இடம்பெறும். (19)

# பொலிசாரால் கைதான சிப்பாய் மரணத்தில் மர்மம்

(கொழும்பு)

கடுவல பொலிஸ் நிலையத்தில் கொள்ளை தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று மரணமானார்.

மன்னார் படைத்தளமொன்றில் கடமைபுரிந்த இவர் விடுமுறையில் சொந்த இடம்சென்றபோது வியாபார நிறுவனமொன்றில் ஆயுத முனையில் கொள்ளையில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அப்போது பொலிஸ் காவலில் பலர் இருந்தும் இறப்புக்கான காரணம் தெரியவரவில்லை. (32)

# நியாப் திட்டத்தின் கீழ் பனங்காமம் இலக்கு கிராமம் புனரமைப்பு

மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப் பனங்காமம் இலக்கு கிராமத்திற்கான வேலைகளில் கமக்கார அமைப்பினால் குளப்பங்காரர்களின் உதவியுடன் பங்களிப்பு வேலைகள் நடைபெறுகின்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் கடந்த25ஆம் திகதி பொது நோக்கு மண்டபத்திற்கு மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளரினால் அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூன்றுமுறிப்பு கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர், உபதலைவர், சமூக உணர்வூட்டாளர்கள், பொது மக்களும் கலந்து கொண்டார்கள்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பொதுக்கிணறுகள் மூன்று நிர்மாணிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. ஜீவனோபாய ஆதாரத் திட்டத்திற்கு பயனாளிகளிடமிருந்து மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் விண்ணப்பம் பெற்றுள்ளார்கள். இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக உணர்வூட்டல் பகுதியின் உதவியுடன் பயனாளிகள் முன்னுரிமைகப்படுத்தும் நிகழ்வு நடைபெற்று பயனாளிகளிற்கு கடனுதவி வழங்கப்படும்.

# மீன்பிடிப் படகுகளை சோதனையிட அனுமதிக்க கடற்படை வலியுறுத்து

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளைச் சோதனையிடுவதற்கு மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று படைத் தரப்பு கோரியுள்ளது.

குறிப்பாக மீன்பிடித் தொழிலுக்குப் புறப்பட முன்னரும் தொழிலில் இருந்து திரும்பும்போதும் கரையோரப் பகுதியில் வைத்து மீன்பிடிப் படகுகளைச் சோதனையிடுவதற்கு படைத்தரப்பு தற்போது முற்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி சோதனை நடவடிக்கைகளுக்கு பரவலாக எதிர்ப்புத் தெரிவித்துவரும் வடமராட்சி மீனவர்கள் படையினர் அடாவடித்தனமாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், அவ்வேளை தமது மீன்பிடி உபகரணங்களை அவர்கள் சேதப்படுத்தி வருவதாகவும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இதனை அடுத்து நேற்று முன்தினம் வடமராட்சி வடக்கு மீனவர் சங்க சமாசத்தின் செயலாளரான க. சூரியகுமாரும், 524ஆவது படையணிக்கு அழைக்கப்பட்டு சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

524ஆவது படையணியின் கட்டளை அதிகாரியான கேணல் ரட்ணாயக்கவைச் சந்தித்து சோதனை நடவடிக்கைகளுக்கு படையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனப் படையதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

மீனவர்கள் சோதனைக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் வீணான அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் இது தொழில் நடவடிக்கையில் சுமுகமான நிலையைத் தோற்றுவிக்க எனவும் முடியும் படையதிகாரி கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, வல்வெட்டித்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகளை கடற்படை அடாத்தாகச் சோதனையிட்டதைக் கண்டித்து அப்பகுதி மீனவர்கள் அண்மையில் எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

# பொலிஸ் உத்தியோகத்தர் பிரச்சினைகளை ஆராயகுழு

அரசாங்கம் பொலிஸ் உத்தியோகத்தர்களது பிரச்சினை, பதவி உயர்வு விடயங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான சிபாரிசுகள் ஒரு மாதத்திற்குள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா கூறினார். வாழ்க்கை பிரச்சினைகள் தீர்வுகாணும் நோக்கத்துடன் கொடுத்துள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா கூறினார். இந்தவிடயங்கள் சம்பந்தமாக தீர்வுகாண உள்துறை அமைச்சரின் செயலாளரை தலைவராகக் கொண்ட குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் - 2003

## தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழ் தவறவிட்டோர் கருத்திற்கு.

தமிழீழ மீட்புநிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர் 2003ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள அட்டையுடன் கீழ்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2003ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நிதித்துறை வேண்டுகிறது.

**07-09-2003 (ஞாயிறு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசியல்துறைச் செயலகம் | - | மானிப்பாய் | காலை | - | 08.00 - 09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | சண்டிலிப்பாய் | மு.ப. | - | 10.00 - 11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | சுன்னாகம் | ந.ப. | - | 12.00 - 01.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | நீர்வேலி | பி.ப. | - | 02.00 - 03.30 மணி |

**08-09-2003 (திங்கள்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசியல்துறைச் செயலகம் | - | வல்வெட்டித்துறை | காலை | - | 08.00 - 09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | தம்பசிட்டி | மு.ப. | - | 10.00 - 11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | கரவெட்டி | பி.ப. | - | 12.30 - 02.30 மணி |

**09-09-2003 (செவ்வாய்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசியல்துறைச் செயலகம் | - | கைதடி | காலை | - | 08.00 - 09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | சங்கத்தானை | மு.ப. | - | 10.00 - 11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - | நல்லூர் | பி.ப. | - | 02.30 - 04.00 மணி |

**10-09-2003 (புதன்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசியல்துறைச் செயலகம் | - | கோப்பாய் | காலை | - | 08.00 - 09.00 மணி |
| வீரசிங்கம் மண்டபம் | - | யாழ்ப்பாணம் | மு.ப. | - | 11.00 - 02.00 மணி |

**11-09-2003 (வியாழன்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மத்திய கல்லூரி | - | கிளிநொச்சி | பி.ப. | - | 02.45 - 04.00 மணி |

# உலக ஆசிரியர் தினத்தைமுன்னிட்டு எழுத்தாக்கத்திறன் போட்டி

## மலையகத்திலும் இம்முறை நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

உலக ஆசிரியர் நாளையொட்டி தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் தமிழ்மொழி எழுத்தாக்கத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து வடகிழக்குமாகாணக் கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் வடகிழக்கு மற்றும் மலையக மாகாணங்களின் ஆசிரியர்களிடையே தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டித் தேர்வை இந்த ஆண்டும் நடத்தவிருக்கின்றன.

தேர்விலே ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் மூவருக்கு எதிர்வரும் உலக ஆசிரியர் நாளில் ஐயாயிரம் ரூபா பணப்பரிசுகளும் பேரவையின் வெற்றிப் பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் மூவருக்கு ஆயிரம் ரூபா பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

கடந்த ஆண்டில் வடகிழக்கு மாகாணத்தின் 21 கல்வி வலயங்களிலும் மேற்படி போட்டித் தேர்வு நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் மலையக மாகாணங்களிலும் இப்போட்டித் தேர்வு நடத்தப்படுகின்றது. செப்ரெம்பர் 24இல் தேர்வு நடத்தப்பட்டு கூடுதலான புள்ளிகளைப் பெறும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் உலக ஆசிரியர் நாளில் பரிசுகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவிருக்கின்றன.

போட்டித் தேர்வு தொடர்பான விளக்கங்களும் வேண்டுகைப் படிவங்களும் வலயக் கல்விப் பணிமனைகளினூடாகப் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. செப்ரெம்பர் 5ஆம் நாளுக்கு முன்னதாக வேண்டுகைகளை வலயக்கல்விப் பணிமனைகளினூடாக அனுப்பி வைக்குமாறு தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை கேட்டுள்ளது. (வோ)

# மட்டு.தளவாய் கடற்கரையில் இனம் தெரியாத சடலம்

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள தளவாய் கடற்கரையில் இனந்தெரியாத சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இந்தச் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மரண விசாரணை நடைபெற்றது. சடலம் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றப் போட்டியில் துணுக்காய் பி.ச. முதலிடம்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான 2003ஆம் ஆண்டிற்கான போட்டியில் துணுக்காய் பிரதேசசபை முதலிடம் பெற்றுள்ளது.

சென்றமாதம் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற பிரதேச சபைக்கு திருகோணமலையில் உள்ளூராட்சி ஆணையாளரினால் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால்

# கிளி. மாவட்டத்தில் 1537 பேர் பராமரிப்பு

## போரினால் 630 பேர் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் 1537 ஊனமுற்ற அங்கத்தவர்கள் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.**

கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இனங்காணப்பட்ட மேற்படி அங்கத்தவர்களை இந்நிறுவனம் தற்போது பராமரித்து வருகின்றது.

இவர்களில் யுத்தம் காரணமாக 630 பேரும், விபத்தின் விளைவாக 90 பேரும், நோய்த் தாக்கத்தின் காரணமாக 557 பேரும், பிறப்பில் 260 பேரும் ஊனமடைந்தவர்களாவர்.

கிளி. கரைச்சிப் பிரதேசத்தில் 699 பேரும், பூநகரிப் பிரதேசத்தில் 405 பேரும், கண்டாவளைப் பிரதேசத்தில் 433 பேரும் இவற்றுள் அடங்குகின்றனர்.

இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையினை கிளி. மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் கடந்த 1990ஆம் ஆண்டு முதல் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது மேற்படி சங்கத்தினரால் பச்சிலைப்பள்ளி, பளைப் பிரதேசத்தில் 130 ஊனமுற்றவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

நிறுவனத்தின் நிதிப்பற்றாக்குறை காரணமாக இவர்கள் இன்னமும் சங்கத்தினால் உள்வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும், விரைவில் அவர்களையும் சங்கம் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சோ)

# குற்றச்செயல்கள் அதிகரிப்பு காரணமறிய ஆணைக்குழு!

(கொழும்பு)

சிறிலங்காவின் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான காரணத்தைக் கண்டறிய சிறிலங்கா சனாதிபதி மூன்று பேர் கொண்ட ஆணைக் குழுவொன்றை நியமிதுள்ளார். இந்த சனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியும் சனாதிபதி சட்டத்தரணியுமான மதுகொடப்பிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

# தீர்வு காணப்படும் வரை போராட்டம் தொடரும்!

### பல்கலை. கல்விசாரா ஊழியர் வலியுறுத்து

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்திற்கு தீர்வு காணப்படும் வரை மேற்படி போராட்டத்தை கைவிடுவதில்லை என பல்கலைக்கழக பொதுச்சங்கக் கூட்டுக் குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பல்கலைக்கழகங்களின் கல்விகள் நடவடிக்கைகள் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இம்மாதம் 12ஆம் திகதி தொடக்கம் தடைப்பட்டுள்ளது. இதனால் பட்டமளிப்பு வைபவங்கள், வெளிவாரி பட்டப்படிப்பு பரீட்சைகள் என்பன காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன.

# புதிய செயல் திட்டங்கள் ஊடாக 400 பாடசாலைகள் அபிவிருத்தி

400 மில்லியன் ரூபா செலவில் 400 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக சிறிலங்காவின் கல்விஅமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

பாடசாலைகள் அமைச்சின் ஆரம்பப்பாடசாலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இவ்வருடத்திற்குள் 50 பாடசாலைகள் 50 மில்லியன்ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது என்றும் கூறினார். இதற்காகத் தெரிவுசெய்யப்படும் பாடசாலைகளில் ஆண்டு 5 புலமைபரிசில் முடிவுகள், ஆசிரியர்கள் அதிபர்களின் பங்களிப்பு என்பன கவனத்திற்கொள்ளப்படும்.

# மாணவர்கள் இயல்பான கல்வியைத் தொடர இராணுவ நிலைகள் அகற்றப்பட வேண்டும்

### கூட்டமைப்பு பா. உ. விநாயகமூர்த்தி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் இயல்பான கல்வியைத் தொடர்வதற்கு பாடசாலையை ஆண்டியுள்ள இராணுவக் காவலரண்கள், தடைமுகாம்கள் அகற்றப்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள பாடசாலைகளிலே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பாக பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு விஜயம் செய்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (33)

# ஆசிய அபிவிருத்தி வங்கி கல்வி செயற்பாட்டுக்கு உதவி

(கொழும்பு)

கடனுதவி திட்டத்தின் கீழ் கல்வியைப் புனரமைக்கும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியும் சிறிலங்கா அரசாங்கமும் ஒப்பந்த மொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. 60 மில்லியன் டொலரை வழங்கும் முகமாக நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தவும் ஆசிய அபிவிருத்தி வங்கி நடத்துனர் ஜோன் கோணியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்நிதியுதவியைக் கொண்டு மாணவரை சேர்த்துக் கொள்ளுதல், வேலையாட்களுக்கான பயிற்சி, அமைப்பு திட்டங்கள், தளபாடங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப கட்டடம் அமைத்தல், நூலகம், விடுதிகள் பல்கலைக்கழக அச்சகப்பகுதி என்பன அபிவிருத்தி செய்யப்பட விருக்கின்றன.

# வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ இலக்கிய விழா இம்முறை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

ஒக்டோபர் மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் இவ்விலக்கிய விழா வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இத்தமிழ் இலக்கிய விழா தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் ஒன்று வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், அரச செயலக உயர் அதிகாரிகள் பிரதேச செயலர்கள் நகரசபை செயலர்கள் உட்பட பல தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் ஏற்பாட்டுக் கூட்டத்திலேயே தமிழ் இலக்கிய விழாவினை இம்முறை வவுனியாவில் நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விழாவினையொட்டி வவுனியா நகரத்தினை எழுச்சி பூர்வமாக அலங்கரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10)

# விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல தொண்டர் அமைப்புக்களுக்கு இராணுவம் தடை!

(திருமலை)

கிண்ணியடி நீரேரி ஊடாகப் புலிகளின் - கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச சார்பற்ற தொண்டர் நிறுவன உத்தியோகத்தர்கள்செல்வதை சிறிலங்கா இராணுவத்தினர் தடை செய்துள்ளனர் என கிழக்கு மாகாண மக்கள் தொடர்பாடலுக்கான இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிண்ணியடி, மட்டக்களப்பு நகரிலிருந்து 32 கி.மீ. வடகிழக்கில் உள்ள பிரதேசமாகும்.

பிரம்படித்தீவு, சூவெளி முருக்கந்தீவு என்பன புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ளன.

உள்ளூர் தொண்டு நிறுவனமான 'தடாகம்' கடந்த மூன்று வருடங்களாக மேற்படி பகுதிகளில் தமது கடமைகளை இடையூறின்றி ஆற்றி வந்ததாகவும், அவர்களும் தற்போது அப்பகுதிகளுக்குச் செல்ல இராணுவம் அனுமதி மறுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவர்களைச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று 232 ஆவது பிரிகேட்டின் இணைப்பதிகாரி கிண்ணியடிச் சோதனைச் சாவடிக்கு உத்தரவு வழங்கியுள்ளதாகச் சாவடியில் கடமையாற்றும் இராணுவம் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக வாழைச்சேனைப் பிரதேச சபைச் செயலாளரிடம் முறையிடப்பட்டுள்ளது. அத்துடன் 'சேவாலங்கா' என்னும் தொண்டு நிறுவனத்திக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தடாகம் என்ற தொண்டு நிறுவனம் அப்பகுதிகளில் பெரும் சேவையை ஆற்றி வந்துள்ளது. குறிப்பாக, சிறுவர் கல்விப் போசாக்குணவுத் திட்டம், சுயமுயற்சிக் கடன் வழங்கல் மற்றும் தொழில் முயற்சி போன்ற நலன்களைக் கவனித்து வந்துளளது. இந்த அமைப்புகளுக்கே தற்போது தடை விதிக் கப்பட்டுள்ளது.

# பளை நகர்ப் பகுதியில் இலையான் பெருக்கம் அதிகரிப்பு

(வடமராட்சி கிழக்கு)

அண்மைக்காலமாக பளை நகர்ப் பகுதியை அண்டி இலையான் பெருக்கம் அதிகரித்துக்காணப்படுகின்றது. இதனால் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலை தோன்றியுள்ளது.

உணவகங்கள் மற்றும் பல்பொருள் வாணிபங்களில் சீனி, சர்க்கரை, பேரீச்சம்பழம் போன்ற பண்டங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதால் அப்பொருட்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இலையான்கள் மொய்த்தவண்ணமுள்ளன. இதுபோன்று பளைப் பகுதியில் அமைந்துள்ள சந்தையில் மீன்விற்பனைப் பகுதி, இறைச்சிக்கடை போன்றவற்றிலும் இலையான் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. (11)

# விமான நிலையப் பகுதியில் பட்டங்கள் பறக்கத்தடை!

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையப் பகுதியில் பட்டம் பறக்க விடுவதை நிறுத்துமாறு சிறிலங்கா விமானப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

விமான நிலையப் பகுதியில் பட்டங்களைப்பறக்க விடுவதால் விமானங்களை குறித்த இடத்தில் தரையிறக்குவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாக விமானிகள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையைக் கருத்திற்கொண்டே நேற்று முன்தினம் முதல் பட்டங்களைப்பறக்க விடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோணாவில் சந்திப் பாலத்தால் நெருக்கடி!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கோணாவில் சந்திக்கு அருகாமையில் வீதியில் அமைந்துள்ள பாலம் உடைப்பெடுத்து சேதமடைந்த நிலையில் உள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.



கடந்த பல வருட காலமாக மேற்படி பாலம் உடைப்பெடுத்த நிலையில் தற்காலிக புனரமைப்பு வேலைகள் இடம் பெற்றே இப்பாலத்தினூடாகப் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வந்தன.

தற்போது புதுமுறிப்பு கோணாவில் பாலம், கந்தபுரம் மரப்பாலம் ஆகியன நிக்கோட் நிறுவனத்தினரால் புதிதாக அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வேளையில், இவ்விரு பாலங்களுக்கும் நடுப் பகுதியிலுள்ள கோணாவில் பாலம் உடைந்த நிலையில் உள்ளதன் காரணத்தால் கோணாவில் வீதி பாலம் தற்போது திருத்தப்படாவிடில் மாரி காலத்தில் இப்பாலம் மேலும் உடைப்பெடுத்து போக்குவரத்து ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படலாமென அப்பகுதியூடாகப் பயணிக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர். (சோ)

## சிந்தனைக்கு



மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி, அவர்களின் கஷ்டங்களைப் போக்கு வதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.

தமிழீழத்தேசியத் தலைவர்


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 31-08-2003


## ஆட்சிக் கவிழ்ப்பே இலக்கு!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்கவே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இப்போராட்டத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் பங்கேற்க வேண்டும் என ஜே.வி.பி. நடத்திய பாதயாத்திரையின் முடிவில் அக்கட்சியின் பிரச்சாரச் செயலாளர் எதிர்க்கட்சிகளுக்கு விடுத்துள்ள கோரிக்கையானது புதுமையானதோ, ஆச்சரியத்திற்குரியதோ அல்ல.

இப்பாதயாத்திரை தொடங்கப்பட்டபோது வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கென ஓர் இடைக்கால நிர்வாக சபையை தோற்றுவிப்பதற்கு எதிராகவும், அதனை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பதற்கு எதிராகவுமே ஆரம்பிக்கப்படுவதாக ஜே.வி.பி. அறிவிப்புச் செய்திருந்தது. ஆனால், பாதயாத்திரை முடிவில் ஜே.வி.பி. பாதயாத்திரையின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் எதிர்க்கட்சிகள் – அவை எவையாக இருப்பினும் அரசாங்கங்களுக்கெதிரான போராட்டங்களை ஆரம்பிக்கும்போது ஆட்சியைக் கவிழ்ப்பதையே இலக்காகக் கொண்டு செயற்படுகின்றமை ஒன்றும் புதுமையானதல்ல. சுருக்கமாகக் கூறுவதானால், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்ததுமே ஆட்சியை எவ்வாறு கவிழ்ப்பது என்பதைப் பற்றியே அவை சிந்திக்கத் தொடங்கிவிடுகின்றன.

இதன் காரணமாக சிறிலங்காவில் எதிர்க்கட்சிகள் எப்பொழுதும் தமது பணிகளைச் செய்வதில்லை. அதாவது, அரசாங்கத்தை நல்வழிப்படுத்தும் வகையில் செயற்படுவதில்லை. இதன் காரணமாக அரசாங்கங்களும், எதிர்க்கட்சிகளின் பங்கு பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எதிர்க்கட்சிகளை ஓரம்கட்டவும், ஒதுக்கிவிடவுமே அவை எப்பொழுதும் முற்பட்டு நிற்கின்றன.

ஜே.வி.பி. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை எந்த வகையிலாயினும் கவிழ்த்துவிடுதல் வேண்டும் என்பதில் குறியாகவே உள்ளது. இதற்காக எந்த எதிரணியினருடனும் கூட்டுச் சேர ஜே.வி.பி. இயக்கம் தயாராக உள்ளது. இதில் கடந்த காலப் பகை, முரண்பாடு என்பனவற்றை மட்டுமல்ல, தமது கொள்கை, கோட்பாடுகளைக்கூட அவை துறப்பதற்கும் தயாராகவே உள்ளது.

இந்த வகையி...லானதே ஜே.வி.பி., பொ.ஐ.முன்னணியுடன் கூட்டுச் சேருவதற்குத் தீவிரமாக மேற்கொண்டு வரும் முயற்சியாகும். தற்பொழுது ஜே.வி.பி.யுடனான கூட்டுக் குறித்து பொ.ஐ.முன்னணி சற்றுத் தயக்கம் காட்டி வருகின்றபோதும், ஜே.வி.பி. எவ்வாறேனும் கூட்டணி ஒன்றை ஏற்படுத்திவிடுவது குறித்துத் தீவிரமாகவே சிந்தித்து வருகின்றது.

சிறிலங்கா அரசியல் கட்சிகளைப் பொறுத்து அவை எத்தகைய கூட்டுகளுக்கும் தயாராகவே உள்ளன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்க எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரத் தயார் என்பது சிங்கள ஆட்சித் தலைவர்களின் நிலைப்பாடாகும். இதனை சிறிலங்காவின் முதல் சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் சனாதிபதி சந்திரிகா ஆகியோர் வெளிப்படையாகக் கூறியும் உள்ளனர்.

அது மாத்திரமல்ல, தமது கூற்றுக்களுக்கு ஏற்ப ஜே.ஆர். ஜெயவர்த்தன சிறிலங்காவிற்குள் இஸ்ரேலியரைக் கொண்டு வந்தார். இதன் பின்னர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக உதவக்கூடிய எவரையும் அழைத்துவர அவர்கள் தயாராகவே இருந்தனர். இதன் விளைவே, இராணுவப் பயிற்சித் திட்டங்கள் என்ற ரீதியில் பெருமளவில் வெளியார்வரக் கூடியதாக இருந்தது.

இவை புலிகளுக்கு எதிரான போராட்டத்திற்கான கூட்டுகள் ஆயினும் இதை ஒத்ததாக அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான கூட்டணிகளுக்கும் அவர்கள் தயாராகவே உள்ளனர். இதில் கொள்கை, கோட்பாடு வேறுபாடோ, பேயா, பூதமா என்றுகூட அவர்கள் பார்ப்பதில்லை. அதேவேளை, ஆட்சி கவிழ்க்கும் முயற்சியில் இறங்கும் சக்திகளுக்கு இனப்பிரச்சினை என்பது வரலாற்று ரீதியில் உதவி புரிந்துவரும் ஒன்றாகவே உள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயற்சிக்கும் அன்றி முயற்சிப்பதாக வெளிக்காட்டும் அரசாங்கங்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எவையாகிலும் கூட்டுச் சேர்ந்துவிடுவது வழமையானதாகும். இதில் கொள்கை, கோட்பாட்டு வேறுபாடுகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல் அன்றி தமிழரிடம் அன்றிப் புலிகளிடம் தாரைவார்க்கும் செயல் என்பது அரசிற்கு எதிரான சக்திகளின் தாரக மந்திரமாகிவிடும்.

இதில், இடதுசாரி கட்சிகள் இனவாதம் பேசுகின்றன என்பதோ முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டுச் சேர முற்படுகின்றன என்பதோ பேரினவாதிகளாக இனங்காணப்படுகின்றனர் என்பதோ அவர்களுக்குக் கவலை இல்லை. ஏனெனில், அவர்களின் குறிக்கோள் எவ்வழியைப் பயன்படுத்தியாகிலும் ஆட்சியைக் கவிழ்ப்பது, அரசாங்கத்தைக் கைப்பற்றுவதுமே ஆகும். ஆகையினால், விமல் வீரவன்சவின் அறிவிப்பானது அவர் பேசியுள்ள உண்மையே.

# அமைச்சர்கள் கொலை குறித்த தகவல்

# சிறைச்சாலை அதிகாரிகளால் அலட்சியம்

### விசாரணைகளில் கண்டறிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் காணியமைச்சர் ராஜித சேனாரத்னவையும், நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணா நாயக்கவையும் கொலை செய்யச் சூழ்ச்சி செய்த பாதாள குழு உறுப்பினர் ஒருவர் இந்த கொலைத் திட்டமிடல் குறித்து சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தும் அவர்கள் எதுவித நடவடிக்கையினையும் எடுக்காமல் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கொலை முயற்சியின் பின்னணியில் இருந்தவர் எனக்கருதப்படும் தற்போது சிறையிலிருக்கும் நிகால் என்பவரிடம் வாக்கு மூலங்கள் பெறப்படுகின்றன. இதற்காக விசேட புலனாய்வுப் பிரிவு பொலிஸ் குழு வெலிமட சிறைச்சாலைக்குச் சென்றுள்ளது.

இதற்கிடையில் இக்கொலைக்கு ஒபந்தம் செய்த பொ.ஐ. முன்னணி ஆதரவாளர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# 9 மாவட்ட செயலாளர் நியமனங்களை நீக்க உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஒன்பது மாவட்டச் செயலாளர்களின் நியமனங்களை இரத்துச் செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் பதவிக்கு விண்ணப்பித்த வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இதில், பிரதிவாதிகளாக பிரதமர், சட்டமாஅதிபர் உட்பட நால்வர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உரிய நடைமுறை பின்பற்றப்படாமல் பக்கச்சார்பான நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டமையால் பாதிக்கப்பட்ட தனக்கு இழப்பீடாக 5 இலட்சம் ரூபாவை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (32)

# ஜே. வி. பி.யினருடன் செயற்பட மகிந்த ராஜபக்ஷ கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அண்மையில் நடைபெற்ற ஜே.வி.பி.யின் பாதயாத்திரையில் கலந்துகொண்ட பொ.ஐ.மு. உறுப்பினர்களைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஜே.வி.பி.யினருக்கு தென் பகுதியை பொ.ஐ.மு. தலைமைகள் தாரைவார்ப்பதாகவும் பொ.ஐ. முன்னணிக்குள் ஜே.வி.பி.யையும் இணைத்துக் கொண்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதில் ஜே.வி.பி. தம்மை பின்பற்றுவதாகவும் சிறுபான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று அமைச்சர்களாகவும், பிரதமராகவும் வருவதற்கு பொ.ஐ.முன்னணியினர் முண்டியடிப்பதாகவும் அரசமைக்க ஜே.வி.பி., ஈபிடிபி. சிறி.ல.மு.கா., இ.தொ.கா. ஆகிய சிறுபான்மைக் கட்சிகள் வழிசமைத்துத் தரும் வரை பொ.ஐ.மு. உறுப்பினர்கள் சிலர் சாய்வுக் கதிரைகளில் ஓய்வெடுக்கின்றனர் எனவும் அவர் விமர்ச்சித்துள்ளார்.

# கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் 83 பேர் 12 மணி நேரத்தில் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சிறிலங்கா பொலிசாரும் படையினரும் இணைந்து கடந்த வியாழனன்று இரவு முதல் நேற்று முன்தினம் ஆ... வரை நடத்திய தேடுதலின்போது 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசாரும் படையினரும் 156 தடவைகள் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டும், 52 திடீர்ச் சோதனைச் சாவடிகளை அமைத்தும் இந்த தேடுதலில் ஈடுபட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமைச்சர் மகிந்தவின் முக்கிய ஆதரவாளர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை

மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜேசேகரவின் முக்கிய ஆதரவாளர் ஒருவர் மாத்தறையில் விடுதியொன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறு மரணமானவர் மீன்பிடி துறைமுக இணைப்பாளராகப் பதவி வகித்த சுனில் சாந்த (36) என்னும் நபராவார். இவரது மனைவி வசந்தா சுயனி (28) கடுமையான காயத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத குழுவொன்றினால் சுடப்பட்ட இவர்கள் பண மோசடி வழக்கு ஒன்றுக்கு ஆஜராகி விடு திரும்பி வரும் வழியில் விடுதி ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த வேளை இச்சம்பவம் நடந்துள்ளது. இத்தம்பதியினர் இந்திய சோதிடர் ஒருவரிடம் குறி பார்க்கும் நோக்கில் பலரிடம் லட்சக் கணக்கில் பணத்தை மோசடி செய்த குற்றத்திற்காக பொலிசார் இவர்களைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்திருந்ததாகவும் பின்னர் இவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்தப் பண மோசடியில் செல்வந்தர்களுக்கும் தொடர்புள்ளதாகத் தெரிய வருகிறது.

# மன்னாரில் நிகொட் திட்டத்திற்கு இரண்டு கிராமங்கள் தெரிவு

மன்னார் மாவட்டத்தில் நிகொட் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டு கிராமங்கள் முன்னோடி அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தமிழ்ப்பிரதேசத்தில் தாசார் கோட்டைக் கிராமமும் முஸ்லிம் பகுதியில் பெரிய கரிசலும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டதிட்டப் பணிமனைப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஐந்து மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ள இருக்கும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில் சகல அத்தியாவசிய வேலைத்திட்டங்களில் பொருளாதார மேம்பாடுகளும் உள்ளடக்கப்பட இருக்கின்றன.


முதல்கட்டமாக வீதிகள் புனரமைப்பு அந்தப் பகுதிமக்களின் உதவியுடன் முன்னெடுத்துச் செல்லப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் அணிஅபார வெற்றி தொடரையும் கைப்பற்றியது!

19 வயதுக்குட்டபட்ட சிறிலங்கா பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிறிக்கெட் போட்டித் தொடரில் பாகிஸ்தான் வெற்றிபெற்றுள்ளது.

காலி சர்வதேச விளையாட்டரங்கில் நேற்றுநடைபெற்ற மூன்றாவது ஒருநாள் கிறிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணியை ஒன்பது விக்கெட்டுகளால் வெற்றி கொண்டதன் மூலம் மூன்றுக்கு பூச்சியம் என்ற கணக்கில் தொடரைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 48.3 ஓவர்களில் சகலவிக்கெட்டுகளையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டுமிழந்து 194 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.





# ஆசிய கார் ஓட்டப் போட்டி அஜித்குமாருக்கு 6ஆவது இடம்

ஆசிய போமுலா பி.எம். டபிள்யூ சாம்பியன் கார் ஓட்டப் போட்டியில் தமிழக நடிகர் அஜித்குமாருக்கு 6ஆவது இடம் கிடைத்துள்ளது. இப் போட்டி ஆசியாவின் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. 9ஆவது சுற்று கொரியாவில் நடைபெற்றது. முதற்சுற்றில் கலந்து கொண்ட இவரது கார் விபத்துக்குள்ளானது. எனினும் அடுத்த சுற்றில் சிறப்பாக ஓடி ஆரம்பத்தில் 4ஆவது இடத்தை தக்கவைத்திருந்தார். கடைசி நேரத்தில் டைசன் (பிலிப்பைன்ஸ்), கொய்கோ (ஜப்பான்) ஆகியோர் இவரை முந்திச் சென்றனர். இதனால் இவருக்கு 6ஆவது இடம் கிடைத்தது. கார்ப் பந்தயத்தில் பங்குபற்றத் தொடங்கியதிலிருந்து அஜித் பெற்ற சிறந்த பெறுபேறு இதுவாகும்.

# ரஷ்சிய அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல் பாரன்ஸ் கடலில் நேற்று மூழ்கியது

## - 9 மாலுமிகள் பலி

ரஷ்சிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று மாலுமிகள் கடற்படையினருடன் ஆக்டிக்கடலில் நேற்று மூழ்கியுள்ளது.



இதன்போது கடற்படையைச் சேர்ந்த ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகின்றது.

40 ஆண்டுகள் பழைமைவாய்ந்த நொவெம்பர் கே.159 ரக அணு நீர்மூழ்கி ஒன்றை செயலிழக்கச் செய்வதற்காக துறைமுகத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தபோதே கப்பல் கடலின் அடியில் மூழ்கியுள்ளது.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் 'குருஸ்க்' எனும் அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல் மூழ்கிய அதே பாரன்ஸ் கடலில் இதுவும் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை நீர்மூழ்கிக் கப்பலை அடியில் இருந்து மீட்டெடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று ரஷ்சிய கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இருமாலுமிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நீர்மூழ்கியிலிருந்த 10 பேரில் ஒருவர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டார். ஏனையவர்களை உயிருடன் மீட்கும் சாத்தியப்பாடு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடல் நீரில் வெப்பநிலை 50 பாகை பரனைட்டில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தால் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் அரசியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்.

# மடுவீதி திறப்புத் தொடர்பாக ரெலவ்சன் -ஒஸ்ரின் சந்திப்பு

## சில நிபந்தனைகளுடன் மக்களுக்கு அனுமதி?

மடு வீதியைத் திறந்துவிடுவது சம்பந்தமாக நேற்று முன்தின மிரவு பாதுகாப்பமைச்சர் ஒஸ்ரின்பெர்னாண்டோவுக்கும் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன் போது மக்கள் சில நிபந்தனைகளுடன் அப்பாதையில் பயணிக்க தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த வீதியைத் திறந்துவிடுவது தொடர்பாக மீண்டுமொரு பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது. (ரி32)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நாளை மாகாண கல்விப்பணிமனை முன் மறியல்

வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் பணியாற்றுகின்ற பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி நாளை வடகிழக்கு மாகாண கல்விப்பணிமனைக்கு முன்பாக ஒருமறியல் போராட்டத்தை நடத்தப்போவதாக கூறப்படுகிறது. வன்னி வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் சென்று அம் மாகாண கல்விப்பணிமனைக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர்

இவர்களுக்கு இது வரையும் நிரந்தர நியமனம் வழங்கப்படாதமையை ஆட்சேபித்தே இப் போராட்டத்தை நடத்தப் போவதாக தீர்மானித்துள்ளனர். (32)

# வவுனியா பண்டாரிக்குளத்தில் இளைஞர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கைத்துப்பாக்கியால் சுடப்பட்டும் கழுத்து, தலை,முகம் ஆகிய இடங்களில் கோடரியால் வெட்டப்பட்டும் இவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்

கழுத்துக்கு மேற்பட்ட பகுதிகள் சிதைந்து காணப்படுவதுடன் இவரது சடலத்துக்கு அருகில் தொப்பி ஒன்றும் காணப்படுவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

செபமாலை விமலக்குமரன் தெல்லிப் பளை யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட அடையாள அட்டை ஒன்றும் அருகில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிசார் சடலத்தை வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் பயிற்சி

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள ஏழு பிரதேச செயலாளர்கள் சென்னைக்குச் சென்று 10 நாட்கள் பயிற்சி பெற்று வந்துள்ளனர்.

இதன் போது முகாமைத்துவம், நிர்வாகம், சமூகப்பணி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மி)

# "விடுதலைப் புலிகள்" ஏடு இன்று வெளிவருகின்றது

"பேரினவாத உணர்வு நிலையிலிருந்து ரணில் அரசு மீண்டு வர வேண்டும்" என்ற முகப்பு செய்தியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள் " ஏடு இன்று வெளிவருகின்றது.

"83 யூலை இனப்படுகொலை, இருபது வருட நிறைவு" என்ற ஆசிரியத்தலையங்கத்துடன் க.வே. பாலகுமாரன் எழுதிய "நாங்களும் எங்கள் நம்பிக்கைகளும்" அல்லது "மனம் வெளுக்க வழியுண்டா" என்ற அரசியல் கட்டுரையும் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் உருவாக்கம் தொடர்பான, சு.அரசண்ணை எழுதிய "தேசிய எழுச்சிப்பேரவை ஒரு வலுவான மக்கள் கட்டுமானம்" என்ற கட்டுரையும், இந்தோனேசியா - ஆச்சே சுதந்திரப் போராட்ட விபரிப்பு கட்டுரையான "எவருக்கும் கேட்காத ஆச்சே மக்களின் குரல்" மற்றும் "குரங்கு பாஞ்சான் தங்ககம் சர்ச்சைக்கு அப்பாற்பட்டது" கலாநிதி சோமஸ் கந்தன் எழுதிய "யாழ் நூலக எரிப்பும் அரச பயங்கரவாதமும்" போன்ற கட்டுரைகளும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்கள், விமர்சனங்களுடன் இவ் ஏடு வெளிவருகின்றது .

இது "விடுதலைப்புலிகள்" ஏட்டின் "ஆடி - ஆவணி" மாதங்களுக்குரிய 110ஆவது குரலாகும்.

# படையினருக்கு சம்பள உயர்வுவழங்கும் யோசனை அமைச்சரவையால் நிராகரிப்பு

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா படையினருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கும் சனாதிபதியின் யோசனையை அமைச்சரவை நிராகரித்துள்ளது.

படையினருக்கு பெரும் சம்பள அதிகரிப்பொன்றை வழங்குவதற்காக சனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தினை பிரதமர் தலைமையில் கூடிய அமைச்சரவை தந்திரமான முறையில் நிராகரித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கும் பொ.ஐ.முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தின் போதும் படையினருக்கு சம்பள அதிகரிப்பை இந்த அரசு வழங்கப்போவதில்லை எனவும் சாடியுள்ளார்.

# பல்கலை கல்வி சாரா ஊழியரின் போராட்டம் நேற்றுடன் நிறுத்தம்

பல்கலைக் கழகங்களின் கல்வி சாரா ஊழியர்கள் நடத்திவந்த மூன்று வாரகால வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இவ் ஊழியர்களின் தொழிற் சங்கம் மற்றும் அமைச்சர்கள் கருணாசேன கொடித்துவக்கு, கபீர் காசிம் ஆகியோருடனும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

நேற்றுபிற்பகல் 1.30 மணியளவில் இரண்டு தரப்பினரிடையே உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்விசாரா ஊழியர்கள நாளை வேலைக்குச் செல்லவுள்ளனர் என அவர் மேலும் கூறியுள்ளார்.(32)

### இரு...

இருசக்கர உழவு இயந்திரம் நடுவீதியிலேயே குடைசாய்ந்தது.

ஓட்டுநர் சம்பவத்தில் தூக்கி எறியப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

தமிழீழகாவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் ஸ்தலத்திற்கு விரைந்ததுடன் விசாரணையினை மேற்கொண்டனர். (சோ)

### சமஷ்டி..

ஒரு சூழலை ஏற்படுத்தலாம் என்ற நிலைப்பாட்டை விளக்கி கூறுவதுதான் இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும் எனத்தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவின் சமஷ்டிமுறை அல்லது இந்தியாவின் மத்திய மாநில அரசுகள் போன்ற அமைப்பை இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது,

சமஷ்டி அமைப்பின் மூலம்தான் பிரச்சினை தீர்க்கப்படலாம். விடுதலைப்புலிகள் கூட தற்பொழுது சமஷ்டி அமைப்பின் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ள காரணத்தினால் தான் அது இந்திய முறையாக இருக்கும் என்று கருதாது போனாலும் அதற்கு அப்பால் சென்று தமிழர்களுக்கு அவர்களின் அபிலாசைகளைநிறைவேற்றக் கூடிய ஒரு நல்ல முறையில் அமைய வேண்டும் என்றார்.

### புலிகளின்..

வெளியிட்டிருக்கும் அமெரிக்காவின் தெற்காசிய விவாகரத்துறை அதிகாரி மு.ஜேம்ஸ் இந்த செய்தியை மறுத்துள்ளார்.

### வலைபந்தாட்ட...

பெருமைப்படக் கூடிய வகையில் பல சாதனைகள் புரியக்கூடிய சக்தி இவர்களிடம் இருக்கின்றது என்பது இன்றைக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இது சாதாரண வெற்றியாகப் பார்க்கமுடியாது ஒரு விளையாட்டு அணிக்கு மாத்திரம் கிடைத்த வெற்றியாக நாங்கள் பார்க்கக் கூடாது. எமது தேசத்துக்கும் எமது அரசியல் ரீதியான போராட்டத்துக்கும் கிடைத்த ஒரு அரசியல் அந்தஸ்தைபலப்படுத்துவதற்காக பலம் பொருந்தக்கூடிய வெற்றியாகத்தான் நாம் இதனைப் பார்க்க வேண்டும்.

எமது போராட்டத்தின் அரசியல் அந்தஸ்தை உயர்த்தக்கூடிய அந்த அரசியல் அந்தஸ்துக்காக பல இராசதந்திர நகர்வுகளை மேற்கொள்ளும் போது அதற்கு வலுவூட்டக்கூடிய ஒரு வெற்றியாகத்தான் நாம் இந்த போராட்டசூழலில் இதைப் பார்க்கின்றோம்.

இது சாதாரண வெற்றியல்ல எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் எந்தவொரு தேசத்திலும் சமகாலத்தில் இவ்வாறான ஒரு விளையாட்டு அணியை உருவாக்கி தேசத்தின் இறைமையை விடுதலைப் போராட்டத்தின் இறைமையை வெளியுலகுக்குக் கொண்டு வந்த ஒரே ஒரு விடுதலை இயக்கமும் இது எனவும் தெரிவித்தார்.

### சமூகச்..

கிறது.

இதேவேளை வடமராட்சி பகுதியிலும் படையினரால் பாடசாலை மாணவர்கள் சிலருக்கு தடைசெய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடாக்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாகக் கலாச்சாரத்தை பேணும் இளைஞர்கள் குழுவிற்கு வழங்கப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து மேற்படி சிறுவர்களிடமிருந்து ஒளிநாடாக்களை அழித்ததுடன் அவர்களையும் எச்சரித்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர் குடா நாட்டில் கலாச்சாரசீரழிவு கொண்டிருந்த ஒளிப்பதிவு நாடாக்கள், மற்றும் புத்தகங்கள் புலிகளினால் பறிக்கப்பட்டு பொது மக்கள் முன்நிலையில் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளதாக பொது அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன. (27)

### தமிழ்ச்செல்வன்...

4மணிக்கு நடைபெறவுள்ள தமிழீழக் காற்று என்ற எழுச்சி நிகழ்வில் இவர்கள் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலை தொடர்பாக உரையாற்ற இருக்கின்றனர்.

இக்குழுவினர் சில தினங்கள் சுவிற்சர்லாந்தில் தங்கியிருந்துவிட்டு எதிர்வரும் 3ஆம் திகதி கொழும்பு திரும்புவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### புராதன..

எடுக்கவேண்டும் என தொல்பொருளியல் ஆணையாருக்கு சிறிலங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டார்.

இந்த நடவடிக்கைக்காக புராதன பெளத்த சின்னங்கள் குறித்த விபரங்களை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்துமாறு அவர் அத்திணைக்களத் தலைவரைப் பணித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள விகாராதிபதிஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க இக்கூட்டத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட்டியதாகவும் இக்கூட்டத்தில் தொல் பொருள் திணைக்களங்கள் அதிகாரிகள் வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் ஆகியோருடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் படை அதிகாரிகள், கலந்து கொண்டதாகவும் தெரியவருகின்றது. (32)

### பண்ணை..

அடையாள அட்டை மற்றும் உடற் சோதனைகளை பொலிசாருடன் இணைந்து படையினரும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு நீதவானின் உத்தரவை இராணுவம் மீறும் விதத்தில் செயற்படுதல் மக்களுக்கு பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)


## பிள்ளையார் சதுர்த்தி



திருமுறிகண்டி வர்த்தக சங்கத்தின் ஆதரவில் 31.08.2003 அன்று நடைபெறும் பிள்ளையார் சதுர்த்திப் பூசையிலும் அன்னதானத்திலும் சகல மக்களும் கலந்து சிறப்பிக்கவேண்டும் என்றும், தமிழீழ மக்கள் சுபீட்சமும் சுகவாழ்வும் பெற, யுத்தமற்ற சமாதானம் நிலைத்திருக்க திருமுறிகண்டி "பிள்ளையார்" அருள் புரியவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள்.

வர்த்தக சங்கம்,
திருமுறிகண்டி.

(2297)

## திரு முறிகண்டிப் பிள்ளையார் சதுர்த்தி உற்சவத்தில்



கற்பகமாய் விளங்கிவரும் பிள்ளையாரப்பா
உன் அருள் என்றும் வெற்றி தானப்பா

செல்வம்,கீரிமலை.
ஈழநாதம்,

(சி-8265)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.